# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 126 of 2017 PW :3

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. மணிகண்டன்

Father's Name : திரு. கிருஷ்ணன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 37

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.05.2026

**தேதி. 22.05.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 126/2017 அ.த.சா.3 திரு.மணிகண்டன் த/பெ. திரு. கிருஷ்ணன் வயது 37 அவர்களை சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொம்மராஜிபேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் எனது தம்பி ஆவார். கடந்த 08.07.2015 அன்று இரவு 7.00 மணி முதல் 11.00 மணிவரை வீட்டில் மின்சாரம் இல்லாததால் எனது இரண்டு செல்போன்களான 1. Apple iphone 2. ASUS இரண்டு போன்களையும் வீட்டின் ஹாலில் வைத்துவிட்டு மேலே சென்று தூங்கிவிட்டு மறுநாள் காலை வந்து எனது இரண்டு செல்போன்களை வந்து பார்த்தபோது காணவில்லை. பிறகு இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் எனது தம்பி புகார் அளித்தார். பின்னர் எனது இரண்டு செல்போன்களும் எடுத்துச் சென்ற நபரே திரும்ப கொடுத்துவிட்டதாக எனது தம்பி நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக்கொண்டார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செல்போன்கள் தான் எனது வீட்டில் இருந்து காணாமல் போனதாகும். **அது அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக நான் தனிப்பட்ட முறையில் எனது செல்போன் காணாமல் போனது என்று புகார் ஏதும் தரவில்லை என்றால் சரிதான். எனது தம்பி செல்போன் காணவில்லை என்று தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காணாமல் போனது எனது செல்போன்கள் தான் என்பதற்கு பில் ஏதும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து எவ்வளவு நாள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் மறுநாளே எனது தம்பி புகார் கொடுத்தார். பின்னர் இரண்டு செல்போன்களும் கிடைத்துவிட்டது என்று காவல் துறையினர் எனது தம்பியிடம் இரண்டு செல்போன்களை ஒப்படைத்தனர். இரண்டு செல்போன்களை யார் எடுத்துச்சென்றனர் என்ற

விவரம் எனக்கு தெரியாது. எனது தம்பி கொடுத்த புகாருக்கு ஆதரவாகத்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒப்பம் – K. வெங்கடேசன், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**
**பள்ளிப்பட்டு(FAC)**